## மே. 2021 ம் மாத மன்ற கூட்டம்.

பிப்ரவரி-2021ம்மாத மன்றபொருள்

### மன்றப்பொருள்–1

காயல்பட்டணம் நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2020–21ன் கீழ்பணிகள் செய்திட ஒப்பந்தப்புள்ளியினை உள்ளாட்சி சாரல் என்ற பத்திரிக்கையில் 22.01.2021 அன்று விளம்பரம் செய்த வகைக்கு செலவு தொகையாக அந்த நிறுவனத்திற்கு ரூ.10395/– னை பொது நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு–
மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1142/2019/இ1
**தீர்மான எண் 2100 அனுமதிக்கப்படுகிறது**

### மன்றப்பொருள்–2

காயல்பட்டணம் நகராட்சியில் பொது சுகாதார வாகனம் TN 69AY 0603 என்ற வாகனத்திற்கு சில்லறை செலவினங்கள் மேற்கொள்வதற்கும், அதற்கான செலவினத் தொகையாக ரூ.10325/– னை அவசர அவசியம் கருதி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு–
மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 27/2018/அ3
**தீர்மான எண் 2101 அனுமதிக்கப்படுகிறது**

மன்றப்பொருள்–3

காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின்படி வீடு வீடாக சென்று அபேட் மருந்து தெளிப்பதற்கும் மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கையினை 40 தற்காலிக பணியாளர்களைக் கொண்டு, ஒப்பந்த அடிப்படையில் செய்திடவும், அதற்கான ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு அதன் நடைமுறைகள் முடிவுற்று பணிகள் தொடங்கப்படும் வரை உள்ள காலத்திற்கு, ஏற்கனவே இந்நகராட்சியில் திடக்கழிவு மேலான்மையில், உள்ள தனியார் துப்புரவு பணிகளை மேற்கொண்டு வருகின்ற மெஸ்ஸர்ஸ்.கே.ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன், நிறுவனம் மூலம் செய்திட இந்நகர் மன்ற தீர்மான எண். **2079 /2020 (டிசம்பர் மாத மன்ற பொருள்)** ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போழுது ஒப்பந்த பணிகளுக்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுவதால், வருகின்ற 3 மாதங்களுக்கு (ஏப்ரல், மே, ஜீன்), தற்போதைய நடவடிக்கைகளையும் மற்றம் அதற்கான செலவினங்களை பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மேற்கொண்டு தொடர அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.720/2014/அ1
**தீர்மான எண் 2102 அனுமதிக்கப்படுகிறது**

மன்றப் பொருள்-4

காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள TN 69 S 0146 எண். கொண்ட ஸ்வராஜ் மஸ்தா வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்து தகுதி சான்று பெற வேண்டியுள்ளதாக, அந்த வாகன ஓட்டுந அறிக்கை வழங்கியுள்ளார். எனவே அவசர அவசியம் கருதி இதனை உடனடியாக சரி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான வெற்றிவேல் லேபர் ஒர்க்ஸ், திருநெல்வேலி, என்ற நிறுவனத்தின் மூலம் சரி செய்ய வேலை உத்தரவு வழங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.1,00,000/- னை (ஒரு இலட்சம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு-
மன்றம் அனுமதி வழங்கலாம்.
கோப்பு எண். 0227/2021/எச்.1
**தீர்மான எண் 2103 அனுமதிக்கப்படுகிறது**

மன்ற பொருள்–**5**

காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவு மூலம் வீடுகளில் இருந்து குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் வங்குவதற்காக உள்ள **30** எண்ணங்கள் தள்ளு வண்டிகள் அனைத்தும் பழுது ஏற்பட்டுள்ளது. இதனால் இவைகளை பயன்படுத்தப்படாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அவைகளை பொதுசுகாதார நலன் கருதி விரைந்து பழுது நீக்கம் செய்திட அவசர அவசியம் கருதி **3** விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கிடவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.**2.00** இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.
மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண். 229/2021/எச்.1.
**தீர்மான எண் 2104 அனுமதிக்கப்படுகிறது**

மன்றப் பொருள்-6

காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள TN 92 C 6881 எண். கொண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்ய வேண்டியுள்ளதாக, அந்த வாகன ஓட்டுநர் அறிக்கை வழங்கியுள்ளார். எனவே அவசர அவசியம் கருதி இதனை உடனடியாக சரி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ், திருநெல்வேலி, என்ற நிறுவனத்தின் மூலம் சரி செய்ய வேலை உத்தரவு வழங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.28180/- னை இந்நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு-
மன்றம் அனுமதி வழங்கலாம்.
கோப்பு எண். அ4/0188 / 2020
**தீர்மான எண் 2105 அனுமதிக்கப்படுகிறது**

மன்றப்பொருள் -7

காயல்பட்டணம் நகராட்சியில் 2021-22-க்கான உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கை தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகின்றது.

அ.கு

மன்றம் பார்வையிடப்பட்டது.

குறிப்பு:-அனுமதிக்கப்படுகிறது

**<u>தீர்மான எண் 2106 அனுமதிக்கப்படுகிறது</u>**

**<u>மன்றப்பொருள்: 8</u>**

காயல்பட்டணம் நகராட்சியில் உச்சிமகாளியம்மன்கோவில் தெரு மேலத்தெரு சாலை மண் சாலையாக இருப்பதால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதால் பொதுமக்கள் நலன் கருதி அத்தெரு சாலையினை சிமெண்ட் பேவர் பிளாக்கல் பதித்து சாலை அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>தீர்மான எண் 2107 அனுமதிக்கப்படுகிறது</u>**

**<u>மன்றப்பொருள்: 9</u>**

காயல்பட்டணம் நகராட்சியில் உச்சிமகாளியம்மன்கோவில் தெரு கீழத்தெரு சாலை மண் சாலையாக இருப்பதால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதால் பொதுமக்கள் நலன் கருதி அத்தெரு சாலையினை சிமெண்ட் பேவர் பிளாக்கல் பதித்து சாலை அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>தீர்மான எண் 2108 அனுமதிக்கப்படுகிறது</u>**

**<u>மன்றப்பொருள்: 10</u>**

காயல்பட்டணம் நகராட்சியில் அருசியாபள்ளி சாலையில் பள்ளமான பகுதியில் மழைக்காலங்களில் அதிகமான மழைநீர் தேங்கி விடுவதால் அப்பகுதி பொதுமக்கள் மிகுந்த சிரமப்படுவதால் அப்பகுதி பொதுமக்கள் நலன் கருதியும் அப்பகுதி பொதுமக்களின் கோரிக்கையின்படியும் அச்சாலையில் பள்ளமான பகுதியினை மட்டும் மழைநீர் தேங்காதவாறு உயர்த்தி சிமெண்ட் பேவர் பிளாக்கல் பதித்து சாலை அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**<u>தீர்மான எண்2109 அனுமதிக்கப்படுகிறது</u>**

**மே .2021ம்மாத மன்றபொருள்**

மன்ற பொருள்-1

காயல்பட்டிணம் நகராட்சியின் பொதுநிதி- தொகை ரூ.5000000/- (ஐம்பது இலட்சம்) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, காயல்பட்டிணம் கிளையில் Deposit Receipt No–**2011**/NDRI **049104511200037**, நாள்**-28/03/2012**, அன்று (DEPOSIT) வைப்புத் தொகையாக வைக்கப்பட்டது. மூண்றான்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது மேற்படி கணக்கு 28/03/2021 வுடன் முடிவடைகிறது. இந்நகராட்சியின் பொதுநிதியின் கீழ் செலவினங்கள் மேற்கொள்ள வேண்டி உள்ளதால், மேற்படி வைப்பு (DEPOSIT) தொகையினை தொடர்ந்து புதுப்பிக்க இயலாத நிலையில் மேற்படி தொகையினை 28/03/2021 வுடன் முடிவு செய்து பொதுநிதி கணக்கிற்க்கு மாற்றம் செய்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு,

**தீர்மான எண் 2110 அனுமதிக்கப்படுகிறது**

மன்றப்பொருள் 2

காயல்பட்டணம் நகராட்சியில் உள்ள அனைத்து பிரிவு பிரிண்டர்களுக்கும் டோனர் வாங்குவதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ.**75,000/–** மட்டும் பொதுநிதியில் இருந்து செலவு செய்திடவும் மேலும் குறைந்த விலைப்புள்ளி வழங்கும் நிறுவனத்தின் தொகையினை அனுமதித்து அந்நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.997/2015/C2

**தீர்மான எண் 2111 அனுமதிக்கப்படுகிறது**

மன்றப்பொருள் 3

காயல்பட்டணம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான எழுதுபொருட்கள் மற்றும் படிவங்கள் மற்றும் ஸ்டேஷ்னரி பொருட்கள் **2021 – 2022** ஆம் ஆண்டு வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவு தொகை **5.00** இலட்சம் மட்டும் ஆகும். மேற்படி செலவு தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு தொகையினை அனுமதித்து வழங்கிடவும் மன்ற அனுமதிக்கு.

ந.க.எண்.997/2015/அ1

**தீர்மான எண் 2112 அனுமதிக்கப்படுகிறது**

**மன்ற பொருள் 4**

காயல்பட்டணம் நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள பொது சுகாதார வாகனங்களின் அவசர அவசியம் கருதி பழுது பார்த்த வகைக்கு (இணைப்பில் உள்ள பட்டியல் படி) கீழ்க்கண்ட விவரப்படி இந்நகராட்சி ஓட்டுநர் திரு. வெ.ராதாகிருஷ்ணன் அறிக்கை மற்றும் சுகாதார ஆய்வாளர் பரிந்துரை படி, சில்லறை செலவுகள் மேற்கொண்ட வகைக்கு பொது நிதியில் இருந்து, ஓட்டுநர் திரு. வெ.ராதாகிருஷ்ணன் பெயருக்கு தொகை வழங்க மன்ற அனுமதிக்கு,

| வ.எண் | வாகனங்களின் எண். | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | TN 69 D0054 பொது சுகாதார வாகனம் | 1850.00 |
| 2 | TN 92 C 6881 அலுவலக வாகனம் | 5550.00 |
| 3 | TN 92 D 0019 | 1975.00 |
| 4 | TN 69 D0054 பொது சுகாதார வாகனம் | 1850.00 |
| | மொத்தம் | 11325.00 |

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். 001/2020/எச்1

**தீர்மான எண் 2113 அனுமதிக்கப்படுகிறது**

**மன்ற பொருள் 5**

காயல்பட்டணம் நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள பொது சுகாதார வாகனங்களின் அவசர அவசியம் கருதி பழுது பார்த்த வகைக்கு (இணைப்பில் உள்ள பட்டியல் படி) கீழ்க்கண்ட விவரப்படி இந்நகராட்சி ஓட்டுநர் திரு. வெ.ராதாகிருஷ்ணன் அறிக்கை மற்றும் சுகாதார ஆய்வாளர் பரிந்துரை படி, சில்லறை செலவுகள் மேற்கொண்ட வகைக்கு பொது நிதியில் இருந்து, ஓட்டுநர் திரு. வெ.ராதாகிருஷ்ணன் பெயருக்கு தொகை வழங்க மன்ற அனுமதிக்கு,

| வ.எண் | வாகனங்களின் எண். | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | TN 69 D0051 பொது சுகாதார வாகனம் | 240.00 |
| 2 | TN 69 S 0146 பொது சுகாதார வாகனம் | 3336.00 |
| 3 | TN 69 AY 0603 பொது சுகாதார வாகனம் | 8200.00 |
| 5 | TN 92 D 0019 | 1270.00 |
| 6 | TN 92 U 6922 | 4990.00 |
| 7 | TN 69 A 6369 | 1250.00 |
| | மொத்தம் | 19286.00 |

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். 001/2020/எச்1

**தீர்மான எண் 2114 அனுமதிக்கப்படுகிறது**

<u>மன்றப்பொருள் 6</u>

காயல்பட்டணம் தென்பாகம் கிராமம் புல எண். 89/2 ல் 0.03.0 ஹெக்.ஏர்ஸ் நிலமானது தனக்கு உரிய என்றும், அதற்கான சொத்துவரி விதிப்பு எண். 139/130717 னை நகராட்சியினால் ரத்து செய்யப்பட்டது தொடர்பாக திரு. பாண்டியன் த/பெ செல்லையா என்பவர் மதுரை கிளையில் (சென்னை உயர்நீதிமன்றம்) வழக்கு எண். WP (M.D) No.7725/2021 தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.எம்.ராஜராஜன், என்பவர் ஆஜராகிய வகைக்கு, அதற்கான வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு–</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்

<u>ந.க.எண். 386/2021/அ1</u>

**<u>தீர்மான எண் 2115 அனுமதிக்கப்படுகிறது</u>**

மன்றப்பொருள் 7

காயல்பட்டணம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டில் உள்ள TN 92 D 0019 என்ற எண் உள்ள வாகனத்தின் பயன்பாடு, தற்போது கொரானா வைரஸ் பாதிப்பு காலமாக உள்ளதால் அதிக அளவில் உள்ளது. மேலும் இதற்கு தகுதி சான்று முடிவுற்று புதிதாக தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால், இந்த வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை, வாகன ஓட்டுநர் அறிக்கையின் படி, குறைந்த விலைப்புள்ளி வழங்கிய அய்யனார் ஆட்டோ மொபைல் இஞ்சினியரிங் ஒர்க்ஸ், தூத்துக்குடி என்ற நிறுனத்தின் மூலம் செய்திடவும், இதற்கான உத்தேச செலவு தொகை ரூ.25,000/– த்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்காம்.
ந.க.எண். அ4/ 0186/2020
**<u>தீர்மான எண் 2116 அனுமதிக்கப்படுகிறது</u>**

மன்றப்பொருள் 8

காயல்பட்டணம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டில் உள்ள TN 92 D 0051 என்ற எண் உள்ள வாகனத்தின் பயன்பாடு, தற்போது கொரானா வைரஸ் பாதிப்பு காலமாக உள்ளதால் அதிக அளவில் உள்ளது. மேலும் இதற்கு தகுதி சான்று முடிவுற்று புதிதாக தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால், இந்த வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை, வாகன ஓட்டுநர் அறிக்கையின் படி, குறைந்த விலைப்புள்ளி வழங்கிய அய்யனார் ஆட்டோ மொபைல் இஞ்சினியரிங் ஒர்க்ஸ், தூத்துக்குடி என்ற நிறுனத்தின் மூலம் செய்திடவும், இதற்கான உத்தேச செலவு தொகை ரூ.25,000/– த்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்காம்.
ந.க.எண். அ4/ 0185/2020
**<u>தீர்மான எண் 2117 அனுமதிக்கப்படுகிறது</u>**

மன்றப்பொருள் 9

காயல்பட்டணம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டில் உள்ள TN 92 D 0052 என்ற எண் உள்ள வாகனத்தின் பயன்பாடு, தற்போது கொரானா வைரஸ் பாதிப்பு காலமாக உள்ளதால் அதிக அளவில் உள்ளது. மேலும் இதற்கு தகுதி சான்று முடிவுற்று புதிதாக தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால், இந்த வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை, வாகன ஓட்டுநர் அறிக்கையின் படி, குறைந்த விலைப்புள்ளி வழங்கிய அய்யனார் ஆட்டோ மொபைல் இஞ்சினியரிங் ஒர்க்ஸ், தூத்துக்குடி என்ற நிறுனத்தின் மூலம் செய்திடவும், இதற்கான உத்தேச செலவு தொகை ரூ.35,000/– த்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்காம்.
ந.க.எண். அ4/ 0184/2020
<u>**தீர்மான எண் 2118 அனுமதிக்கப்படுகிறது**</u>

மன்றப்பொருள் 10

காயல்பட்டணம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டில் உள்ள TN 92 D 0054 என்ற எண் உள்ள வாகனத்தின் பயன்பாடு, தற்போது கொரானா வைரஸ் பாதிப்பு காலமாக உள்ளதால் அதிக அளவில் உள்ளது. மேலும் இதற்கு தகுதி சான்று முடிவுற்று புதிதாக தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால், இந்த வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை, வாகன ஓட்டுநர் அறிக்கையின் படி, குறைந்த விலைப்புள்ளி வழங்கிய அய்யனார் ஆட்டோ மொபைல் இஞ்சினியரிங் ஒர்க்ஸ், தூத்துக்குடி என்ற நிறுனத்தின் மூலம் செய்திடவும், இதற்கான உத்தேச செலவு தொகை ரூ.35,000/– த்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்காம்.
ந.க.எண். அ4/ 0186/2020
<u>**தீர்மான எண் 2119 அனுமதிக்கப்படுகிறது**</u>

<u>மன்றப்பொருள் 11</u>

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் கோவிட்–19 தடுப்பு நடவடிக்கையாக, தமிழக அரசு அறிவுறுத்தியதன் படி, இந்நகராட்சி பகுதியில் காய்ச்சலால் பாதிக்கப்படும் நபர்களை முகாம்கள் நடத்தி கண்காணித்து நடவக்கை எடுக்கவும், பொது மக்கள் கூடும் முக்கிய இடங்களில் கோவிட்–19 தடுப்பு முன்னெச்சரிக்கை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி விளம்பர பதாகைகள் வைத்திடவும், பொது இடங்களில் தெளிப்பதற்கு ஏற்றவாறு கிருமிநாசினியாகிய லைசால், தூய்மை பணியாளர்கள் அணிவதற்க்கான முககவசம் ஆகின மற்றும் பொது சுகாதாரத்திற்கு தேவையான பொருட்களை அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் செய்வதற்கும், இதர செலவினங்களுக்கும், (அரசாணையில் ஒதுக்கப்பட்ட தொகையில் செலவு செய்திட) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அரசாணை எண். 369 நாள் 06.05.2021 படி, காயல்பட்டணம் நகராட்சிக்கு இது தொடர்பாக (நிவாரண நிதி) செலவினங்கள் மேற்கொள்ள தொகை ரூ.30.00 (முப்பது இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும்,

<u>அலுவலக குறிப்பு–</u>
மன்றம் பார்வையிட்டு அனுமதிக்காம்.
<u>ந.க. எண்.538/2021/எச்.1</u>
<u>**தீர்மான எண் 2120 அனுமதிக்கப்படுகிறது**</u>

## மன்ற பொருள் 12

காயல்பட்டணம் நகராட்சியில் அலுவக பயன்பாட்டில் உள்ள டிஎன் 92ஏ 6369 என்ற வாகனம் நடந்து முடிந்த 2020ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின் போது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில், தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டதில் இருந்து தேர்தல் முடியும் நாள் வரை அதிகப்படியான பயன்பாட்டில் இருந்து வந்ததது. எனவே இந்த வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து தருமாறு வாகன ஓட்டுநர்(பொ) அறிக்கை செய்துள்ளளார். எனவே மேற்படி பழுதுகளை அவசர அவசிம் கருதி உனடியாக சரிசெய்ய விலைபுள்ளிகள் பெற்று வேலை உத்தரவு வழங்கவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.30,000/— (முப்தாயிரம் மட்டும்) னை பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> — மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 81/2017/அ4
**<u>தீர்மான எண் 2121 அனுமதிக்கப்படுகிறது</u>**

மன்றப்பொருள்-13

காயல்பட்டணம் நகராட்சி வருவாய் பிரிவின் கீழ் உள்ள குத்தகை இனங்கள் மார்ச் 2021 உடன் முடிவு பெறுவதை முன்னிட்டும் ஏலம் ரத்து செய்யப்பட்டு நகராட்சி மூலம் நேரடியாக வசூல் செய்யும் குத்தகை இனங்களையும் ஜூன் 2021 மாதத்தில் நகராட்சியின் வருவாய் நலன் கருதி புதிதாக ஏலம் விடுவதற்கு (காலம் ஜூலை 2021 முதல் மார்ச் 2022 முடிய ) கீழ்கண்ட பட்டியலில் உள்ள இனங்கள் மன்றத்தின் அனுமதிக்கு

1) பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டணம்
2) ஆடு, மாடு அறுப்பு கூடம்
3) நகராட்சி தினசரி சந்தை
4) கடற்கரை பூங்கா சிறு வியாபாரிகளிடம் வசூல் செய்தல்
5) கடற்கரை பூங்கா பகுதிக்கு வரும் வாகனங்கள் நிறுத்தம் வசூல் செய்தல்
6) அலுவலக தென்னை மரங்கள் மேல் மகசூல் குத்தகை
7) கடற்கரை பூங்கா பகுதியிலுள்ள கட்டண கழிப்பறை
8) பேருந்து நிலைய கட்டண கழிப்பறை
9) ஓடக்கரை பகுதியிலுள்ள உப்பு ஓடை மீன்பிடி குத்தகை

**அலுவலக குறிப்பு**
நகராட்சி வருவாய் நலன் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் அனுமதிக்காக
**<u>தீர்மான எண் 2122 அனுமதிக்கப்படுகிறது</u>**

**மன்றப்பொருள் 14**

காயல்பட்டணம் நகராட்சியில் **15th CFC Tied Grant – (Ist Installment) 2020-2021**ன் கீழ் காயல்பட்டணம் நகராட்சி கற்புடையார்பள்ளிவட்டம்,உச்சிமகாளியம்மன்கோவில் தெரு மற்றும் கோமான்புதுார் ஆகிய இடங்களில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு பாதுகாப்பு சுவர் கட்டுதல் பணிக்கு 24.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1) திரு.ஆர்.தலவாணிமுத்து.
   38,பூந்தோட்டம்
   காயல்பட்டணம் — மதிப்பீடு ரேட்டை விட 0.03% குறைவு

2) திரு.டி.மாதவன்
   ஓடக்கரை
   காயல்பட்டணம் — மதிப்பீடு ரேட்டை விட 0.54% கூடுதல்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர்.தலவாணிமுத்து,38,பூந்தோட்டம்,காயல்பட்டணம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் 2123 அனுமதிக்கப்படுகிறது**

**மன்றப்பொருள் 15**

காயல்பட்டணம் நகராட்சியில் **15th CFC Tied Grant – (Ist Installment) 2020-2021**ன் கீழ் காயல்பட்டணம் நகராட்சி கீழலட்சுமிபுரம்,இரத்தினாபுரி மற்றும் ஓடக்கரை ஆகிய இடங்களில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு பாதுகாப்பு சுவர் கட்டுதல் பணிக்கு 24.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1) திரு.ஆர்.தலவாணிமுத்து.
   38,பூந்தோட்டம்
   காயல்பட்டணம் — மதிப்பீடு ரேட்டை விட 0.54% கூடுதல்

2) திரு.டி.மாதவன்
   ஓடக்கரை
   காயல்பட்டணம் — மதிப்பீடு ரேட்டை விட 0.03% குறைவு

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.டி.மாதவன்,ஓடக்கரை,காயல்பட்டணம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் 2124 அனுமதிக்கப்படுகிறது**

**<u>மன்றப்பொருள் 16</u>**

காயல்பட்டணம் நகராட்சியில் **15th CFC Tied Grant – (Ist Installment) 2020-2021**ன் கீழ் காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்றும் நிலையத்திற்கு 5000LPM x 70M Head திறனுள்ள ஒரு எண்ணம் horizontal split casing Centrifugal pump விநியோகம் செய்தல் பணிக்கு 24.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1) திரு.ஆர்.தலவாணிமுத்து.
   38,பூந்தோட்டம்
   காயல்பட்டணம் — மதிப்பீடு ரேட்டை விட 1.39% கூடுதல்

2) திரு.டி.மாதவன்
   ஓடக்கரை
   காயல்பட்டணம் — மதிப்பீடு ரேட்டை விட 0.01% குறைவு

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.டி.மாதவன்,ஓடக்கரை,காயல்பட்டணம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதி வழங்கலாம்
**<u>தீர்மான எண் 2125 அனுமதிக்கப்படுகிறது</u>**

**<u>மன்றப்பொருள் 17</u>**

நகராட்சியில் குடிநீர் விநியோகப்பயன்பாட்டில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை தேவையான பணியாளர்கள் மற்றும் அதற்கான சுத்தம் செய்யும் பொருட்களை பயன்படுத்தி சுத்தம் செய்தல், நகராட்சிப்பகுதிகளில் உள்ள குடிநீர் பம்பிங் குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யப் பதிக்கப்பட்டுள்ள அனைத்து வகை குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை அதற்கான பணியாளர்கள் மற்றும் அதற்கு தேவையான பொருட்களை பயன்படுத்தி சீரமைத்தல், நகராட்சிப்பகுதிகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரி செய்யும்பொழுது சிமெண்ட் சாலைகள் மற்றும் தார்சாலைகளில் ஏற்படும் பழுதுகளை அதற்கான பணியாளர்கள் மற்றும் தேவையான பொருட்களை பயன்படுத்தி சீரமைத்தல், தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள குடிநீர் பம்பிங் செய்யும் பணிகளை செய்திட மின்பணியாளர் (நிலை 2) ஒரு நபர் மற்றும் உதவியாளர் (மஸ்த்தூர் பணியாளர் நிலை 2) நான்கு நபர்களை நியமித்து பணி செய்தல், நகராட்சிப்பகுதிகளில் குடிநீர் விநியோகப்பணிகளை செய்திட உதவியாளர் (மஸ்த்தூர் பணியாளர் நிலை 2) ஐந்து நபர்கள் மற்றும் அவசர பணிகளுக்காக வாகன ஓட்டுநர் (ஹெவி) ஒரு நபரை நியமித்து பணி செய்தல், காயல்பட்டணம் நகராட்சியில் குடிநீர் கட்டணம் செலுத்தாத நபர்களின் குடிநீர் இணைப்பினை துண்டிப்பு செய்தல் பணிகள் ஆகியவற்றை ஒப்பந்த பணியின் மூலம் செய்திடவும் அதற்கான செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் நகர்மன்ற தீர்மானம் எண்.2017 நாள்.29.05.2020 ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு அதன்படி ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் பணி செய்திட திரு.டி.மாதவன், ஓடக்கரை ,காயல்பட்டணம் என்பவருக்கு 06.05.2020 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

தற்பொழுது மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்ததாரரின் ஒப்பந்தக்காலம் மே 2021 அன்றுடன் முடிவடைகிறது. ஆனால் தற்பொழுது வரை தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை விலை விகிதப்பட்டியல் வெளியிடப்படாததால் மதிப்பீடு தயாரித்து மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.தற்பொழுது கொரோனா பெருந்தொற்று காரணமாக

பொதுமக்களுக்கு சீரான மற்றும் பாதுகாப்பான முறையில் குடிநீர் வழங்கவேண்டிய நிலை உள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிகளுக்கான தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை விலை விகிதப்பட்டியல் 2021-2022 வரப்பெற்று அதன்படி மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்படும் வரை கூடுதலாக மூன்று மாதங்கள் (ஜூன்,ஜூலை மற்று ஆகஸ்ட் 2021 அல்லது அதற்கு முன்பாக) ஏற்கனவே பணி செய்து வரும் ஒப்பந்ததாரரான திரு.டி.மாதவன்,ஓடக்கரை, காயல்பட்டணம் என்பவருக்கு ஏற்கனவே நகர்மன்றத்தால் அங்கிகரிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் தொடர்ந்து பணிகள் செய்திட வேலை உத்திரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>தீர்மான எண் 2126 அனுமதிக்கப்படுகிறது</u>**

மன்றப்பொருள்: 18

காயல்பட்டணம் நகராட்சியில் 15$^{th}$ CFC Tied Grant – 2020-2021-ன் திட்டத்தின் கீழ் குடிநீர் பணிகளில் நகராட்சிக்குட்பட்ட தீவுத்தெருவில் 2.00இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுவதற்கு நகர்மன்ற திர்மானம் எண்.2091 நாள்.31.12.2020 ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டள்ளது. மேலும் காயல்பட்டணம் நகராட்சியானது கடற்கரைக்கு மிக அருகில் இருப்பதால் கட்டுமானம் நடைபெறும் இடத்தில் அரசு பொறியியற்கல்லூரி,திருநெல்வேலி மூலம் மண்பரிசோதனை செய்து வழங்கிட கோரப்பட்டதின்படி கட்டுமான பொறியியற்துறை தலைவர்(HOD of Civil),அரசுபொறியியற்கல்லூரி, திருநெல்வேலி அவர்களின் மேற்பார்வையில் அவர்களின் துறை சார்ந்த விரிவுரையாளர் குழுவால் 06.02.2021 அன்று கட்டுமானம் நடைபெறும் தீவுத்தெரு இடத்தில் மண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதற்கான மண்பரிசோதனை செய்திட கருவிகளை கொண்டு வந்த வகைக்கான வாகனங்களின் வாடகை மற்றும் பணியாளர்கள் சம்பளம் வகைக்கான செலவினம் ரூ.24900/-த்தை நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>தீர்மான எண் 2127 அனுமதிக்கப்படுகிறது</u>**